**இன்றைய இறைவார்த்தை:**
எசாயா 42: 1-4. 6-7
திருப்பாடல் 29: 1-4, 9-10
திருத்தூதர் பணிகள் 10: 34-38
மத்தேயு 3: 13-17

அவர் நெரிந்த நாணலை முறியார், மங்கி எரியும் திரியை அணையார் என்று இரக்கத்தையும் உறுதியையும் கொண்ட ஊழியரைக் காட்டுகிறார். ஒரு ஊழியரின் பணி, மக்களுக்கு உடன்படிக்கையையும், நாடுகளுக்கு ஒளியையும் நிறுவுவதாகும். மேலும் அவரது பணி அனைத்து சமூக நீதிக்கும் மத்தியில் சிறைப் பிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கும் பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கும் விடுதலையாகும்

இந்த இறைவாக்கு யோர்தான் நதியில் உயிர்பெறுகிறது. முரண்பாடாக, பாவமற்ற இயேசுவுக்கு திருமுழுக்கு யோவான் மனம்திரும்புதலின் திருமுழுக்கை வழங்குவதைக் காண்கிறோம். ஆனால் இயேசு ‘கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நிறைவேற்றுவதற்காக அவை அனைத்தையும் ஏற்றுக்கொள்கிறார். இயேசு தண்ணீரில் மூழ்குவதன்மூலம், அவர் நம்முடன் இணக்கத்துடன் இருக்கிறார். நம்முடைய வீழ்ச்சியுற்ற நிலையில் மனிதகுலத்துடன் நின்று அதை உள்ளிருந்து தூயதாக்குகிறார்.

இவ்வாறு இயேசுவின் திருமுழுக்கு அவரது பொது ஊழியத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. அங்கு அவர் தந்தையால் அவருடைய அன்பார்ந்த மகனாக எசாயாவின் இறைவாக்கில் முன்னறிவிக்கப்பட்ட தாழ்ச்சியுள்ள ஊழியராக வெளிப்படுத்தப்படுகிறார். தூய ஆவியார் இயேசுவின் மீது இறங்கும்போது அவரது ஆற்றலையும் திருமுழுக்கு வெளிப்படுத்துகிறது.

இந்த வாரம் நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்? நமது திருமுழுக்கு நமது அடையாளத்தின் இரண்டு முக்கியமான அம்சங்களுடன் நம்மை இணைக்கிறது. கிறிஸ்துவின் உடலாக நம்மைக் கட்டியெழுப்புதல் என்ற உள்ளார்ந்த பொருளையும் உலகின் ஒளியாகவும் மண்ணுலகிற்கு உப்பாகவும் ஆணையிடும் வெளிப்புற அடையாளம். அதாவது தமதிரித்துவத்தின் பெயரால் திருமுழுக்கு பெறும்போது, நாம் தந்தையின் அன்பான குழந்தைகளாக மாறுகிறோம். கிறிஸ்துவர்களாக நாம் என்ன செய்கிறோம் என்பதற்கான அடித்தளமான கல் அது. கிறிஸ்துவின் பணியை நாம் பகிர்ந்துகொள்ளும்போதும், நமக்குக் கொடுக்கப்பட்ட கொடைகளுடன் ஒருவருக்கொருவர் ஆதரவு தருவதன் மூலமும் நாம் ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறோம். நமக்குள் இருக்கும் தூய ஆவியாருடன் கடவுள் தந்த அழைப்பை நாம் நிறைவேற்றும்போது, நாம் மென்மையானவர்களாகவும், அமைதி, இரக்கமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கூக்குரலிடக்கூடாது. தெருவில் நம் குரல் கேட்கக்கூடாது.

நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவோம். அவருடைய வார்த்தைகளை சுவைப்போம். தந்தையின் அன்புக்குரியவராகவும், அனைவருக்கும் ஊழியராகவும் அவருடையப் பாதச்சுவடுகளில் நடப்போம்.

இயேசுவின் பெயரால் நாம் செய்யும் அனைத்திற்கும் பலன், அமைதி. ஆண்டவரே அந்த அமைதியை எடுத்துரைக்கிறார். கடவுள் தம் மக்களை அமைதியால் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

ஒன்றித்துப் பயணிக்கும் திருஅவைக்குத் தேவையான அடிப்படை நடைமுறைகளை குடும்பங்களில் அனுபவிக்கக் கற்றுக்கொள்கிறோம்.
(இறுதி ஆவணம் எண்:35)

INTERNAL CIRCULATION ONLY
BUL 02/2026 | **Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவரின் திருமுழுக்கு | 11 ஜனவரி 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**
*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: குடும்பம்: நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புதல்

# அன்பார்ந்த மகன், தாழ்ச்சியுள்ள ஊழியன்

ஆண்டவருடைய திருமுழுக்கைக் கொண்டாடும்போது, இன்றைய வாசகங்கள் எசாயாவின் இறைவாக்கையும், யோர்தான் நதியில் அது நிறைவேறியதையும் சுட்டிக்காட்டுகின்றன. எசாயா ஒரு **ஊழியனையும் மெசியாவின் வரைபடத்தையும் கற்பனை செய்கிறார்.** உலக எதிர்பார்ப்புகளுக்கு முரணான பண்புகளுடன் கடவுள் தன்னுடைய ஊழியரை முன் வைக்கிறார்.



Image: pinterest.com